பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 05 | புதன்கிழமை | 20.11.2024 | அதிர்வு 110

## கிளி. ஊடகவியலாளர் ரஞ்சன் திடீர் மரணம்!



ஊடகவியலாளர் ஆர். எஸ்.ரஞ்சன் திடீர் சுகயீனம் காரணமாக நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இவர் 05




# நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்கள் சரியான முடிவு

## யாழில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை சுட்டிக்காட்டி சீனத் தூதுவர் இப்படிக் கருத்து

(எஸ்.நிதர்ஷன்)

“அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் பரந்த சிந்தனையோடு விடயங்களை இப்போது நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.”

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் வந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தெரிவித்தார். 05

# இந்திய மீனவர்களின் 13 படகுகளை கடற்படைக்கு வழங்க அரசு உத்தரவு

(ந.லோகதயாளன்)



இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காகத் தமிழக மீன்வர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 13 படகுககளைக் கடற்படையினரின் பயன்பாட்டுக்காக வழங்குமாறு புதிய ஆட்சிப்பீடம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய சமயம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு மன்னார் மற்றும் 05




புதிய நாடாளுமன்றம் நாளை கூடுகின்றது. நாளை பிற்பகலில் அதன் சம்பிரதாயபூர்வ கூட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமை வகித்து, தமது அரசின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்தித் தொடக்கி வைக்கின்றார்.

இந்த சம்பிரதாயபூர்வ நிகழ்வில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு வருகை தரும் போது வழமையாக இடம்பெறும் வைபவ ரீதியான பல விடயங்கள் இம்முறை இருக்கா. அவை ரத்து செய்யப்பட்டு விட்டன என்று கூறப்படுகின்றது.

குறிப்பாக முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை, வெற்றி கீத முழக்கம் போன்றவை இம்முறை ஏற்பாடு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வுக்காக நாடாளுமன்றுக்கு வரும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேரடியாக தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள அறைக்குச் செல்வார். அங்கு சில நிமிடங்கள் ஜனாதிபதி 05





# உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல்



நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கடமையாற்றிய குழுக்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர், நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் நீதியாகவும், சுமுகமாகவும் நடைபெற்றதற்கு ஒத்துழைப்பு நல்கியமைக்காகத் தமது நன்றியைத் தெரிவித்தார்.

மேலும், தெரிவத்தாட்சி அலுவலருக்கு பக்கபலமாக விருந்த விடயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அவர்களோடு இணைந்து பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ்/ம் தேர்தல் செயற்பாடுகளில் சிறப்பாகக் கடமையாற்றியமைக்காக அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.



# மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்று பிரசவத்தின்போது தாயும் சேயும் உயிரிழப்பு

## மருத்துவக் கண்காணிப்பில் கவனயீனம் எனக் குற்றச்சாட்டு








**(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்றிய தினம் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் தாயும் சேயும் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியை சேர்ந்த 28 வயதான வனஜா என்ற திருமணமாகி 10 வருடங்களே ஆன இளம் தாயே நேற்றைய தினம் செவ்வாய் கிழமை மன்னார் வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

முன்னதாகவே குறித்த பெண்ணுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டிருந்த போதிலும் உரிய விதமாக கவனிக்கப்படவில்லை எனவும் பெண் தனக்கு சிசேரியன் செய்யுமாறு கோரிக்கை விடுத்தார் எனவும் வைத்தியர்கள் இயற்கை முறையில் பிரசிவிக்க முயற்சித்த நிலையில் தாயும் பிள்ளையும் மரணமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் கவனயீனத்தாலேயே இந்த மரணம் இடம் பெற்றுள்ளதாகவும் மரணம் அடைந்த விடயத்தை நீண்ட நேரமாக உறவினர்களுக்கு சொல்லாமல் மறைத்தனர் எனவுன் உயிர் இழந்த பெண்ணின் உடலைக் கூடப் பார்பதற்கு பெற்றோரை அனுமதிக்கவில்லை எனவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குறித்த பெண்ணின் மரணத்துக்கு உண்மையான காரணம் என்ன என தெரிவிக்கும் வரை உயிரிழந்த பெண்ணின் உடலை பெற்றுக்கொள்ள போவதில்லை என உறவினர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்பவ இடத்தில் பொதுமக்கள், பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் கூடியிருந்த போதிலும் வைத்தியசாலைப் பணிப்பாளரோ, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளோ சம்பவ இடத்திற்கு நீண்ட நேரம் வருகை தரவில்லை எனவும் அவருடைய தொலைபேசியும் இயங்கவில்லை என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தொ பிரசவ விடுதியில் பணி புரியும் சில ஊழியர்கள் தொடர்சியாகக் கவனயீனமாக செயற்படுகின்றனர் எனவும் வேலை நேரத்தில் நாடகங்கள் பார்க்கின்றனர் எனவும், தொலைபேசிகளை அதிகம் பயன்படுத்துகின்றனர் எனவுன், பிரசவ விடுதிக்குள் நாய்கள் நிற்கின்றன எனவும் அவற்றை கூட அவர்கள் கண்டு கொள்வதில்லை எனவும் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான பின்னனியில் மன்னார் பொது வைத்தியசாலையில் பிரசவ விடுதியில் இவ்வருடத்தில் இடம் பெற்ற மூன்றாவது மரணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கர்ப்பிணித் தாய், சிசு மரணம் குறித்து உடன் விசாரணை

**(ந.லோகதயாளன்)**

மன்னார் பொது வைத்தியசாலையில் நேற்றைய தினம் தாயும் சிசுவும் மரணம் அடைந்தமை தொடர்பில் உடனடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெகன் வனஜா என்னும் 29 வயது என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு தாய், சேய் மரணம் தொடர்பாக உடண்டியாக மத்திய, மாகாண சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பூரண விசாரணை நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்காக இன்று மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார அமைச்சிலிருந்து அதிகாரிகள் வருகை இருக்கின்றனர் என மாகாண ஆளுநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# யாழ். ஊடக அமையத்துக்கு சீனத் தூதுவர் குழு விஜயம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக்கான சீன நாட்டுத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் யாழ். ஊடக அமையத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தனர்.

யாழ். ஊடக அமையத்தின் போசகர் இ.தயாபரன், யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் உள்ளிட்டோர் தூதுவரை வரவேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிலிண்டரின் 2 ஆவது தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பில் இன்று தீர்மானம்

புதிய ஜனநாயக முன்னணியின் இரண்டாவது தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு – ஃப்ளவர் வீதியில் நேற்று கலந்துரையாடல் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், ரோஹித்த அபேகுணவர்தன மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, சுசில் பிரேமஜயந்த, ரமேஸ் பத்திரன, பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

பொதுத்தேர்தலில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணி 3 ஆசனங்களைக் கைப்பற்றியதுடன், 2 தேசியப் பட்டியல் ஆசனங்களையும் பெற்றுக்கொண்டது.

மேற்படி 2 தேசியப் பட்டியல் ஆசனங்களில், ஒரு ஆசனத்திற்காக ரவி கருணாநாயக்கவின் பெயர் முன்னர் பரிந்துரைக்கப்பட்டதுடன் அவரது பெயரை அறிவித்து வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது.

தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு ரவி கருணாநாயக்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு தரப்பினர் நேற்று ஆட்சேபனையை வெளிப்படுத்தினர் .

இந்தநிலையில் இரண்டாவது தேசியப் பட்டியலுக்குப் பலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நேற்றைய சந்திப்பில் முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவின் பெயரைப் பலர் பரிந்துரைத்துள்ளனர்.

இந்தநிலையில், இன்றைய தினத்துக்குள் இரண்டாவது தேசிய பட்டியல் உறுப்பினர் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த பலர் தெரிவித்தனர்.

# உடுத்துறை மகா வித்தி. மாணவர் நாடாளுமன்றம்

யாழ். உடுத்துறை மகா வித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்றம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் அ.சா. அரியகுமார் கலந்துகொள்வார்.

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் மீது மணல் மாபியா கும்பல் தாக்குதல்!

## கிளிநொச்சியில் வெறியாட்டம்

கிளிநொச்சியில் செயற்பட்டு வரும் வடக்கு மாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் மணல் மாபியா கும்பலால் தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைச்சிப் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சகிதம் பணியிலிருந்தபோது தாக்கப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முதல் நாளான கடந்த 13ஆம் திகதி அன்று கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அம்பாள்குளம் 2ஆம் குறுக்குத்தெரு வீதியின் புனரமைப்பு வேலைக்காக பறிக்கப்பட்ட கிரவலினை கரைச்சிப் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் தாக்குதலுக்குள்ளான தொழில்நுட்ப உத்தியோகத்தர் கூட்டளவு மேற்கொண்டிருந்தார். அவ்வேளை அங்கு வந்த ஐந்து பேர் கொண்ட குழு தாக்குதலை நடத்தியுள்ளது.

கையினாலும் பொல்லுகளாலும் தனது முகத்திலும், தலையிலும், நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் அந்தக் குழு தாக்கியது என்று தாக்குதலுக்குள்ளான தொழில்நுட்ப உத்தியோகத்தர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ள மேற்படி தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

தாக்குதலை நடத்தியவர்கள் கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல மணல் கடத்தல் மாபியாக்கள் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள், பணியில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு தவறினால் தொடர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்போம் என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்கி இருக்கும் போது நாடாளுமன்றம் கூடுவதற்கான மணி ஒலிக்கப்படும். அதை அடுத்து வழமைப்படி அதிகாரிகள் சூழ நாடாளுமன்ற சபா மண்டபத்துக்கு ஜனாதிபதி நடந்து வந்து சேருவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வுக்கான வழமையான ஆர்ப்பாட்ட எடுப்புகள், ஆரவாரங்கள் போன்றவை புதிய ஆட்சித் தலைமையினால் தடை செய்யப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

\+ + +

தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு மயிலிட்டி மற்றும் மன்னார் துறைமுகப் பகுதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும் நல்ல நிலையில் உள்ள 13 படகுகளை கடற் படையின் ரோந்து பணிக்காக அவர்களிடம் ஒப்படைக்குமாறு புதிய அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கின்றது.

இந்த உத்தரவு இலங்கை அரசிடம் தமது படகுகளை பறிகொடுத்த தமிழக மீனவர்களை நிச்சயம் சீற்றத்தில் ஆழ்த்தும். இதன் விளைவை வடக்கு கரையோர துறைமுக நகரங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளின் தமிழக உரிமையாளர்களின் இடங்களில் காணக்கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.

---

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மயிலிட்டித் துறைமுகங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் - நல்ல நிலையில் உள்ள படகுகளையே கடற்படையினரிடம் கையளிக்குமாறு கடற்றொழில் நீரியல்வளத் துறை பணிப்பாளர் பணித்துள்ளார்.

கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் எல்.ஜி.ஆர்.இசுராணி ஒப்பமிட்டு இந்த உத்தரவை மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கமைய மன்னாரில் இருந்து 5 படகுகளும், யாழ்ப்பாணத்தில் இருந்து 8 படகுகளும் என மொத்தம் 13 படகுகள் கடற்படையினரின் பாவனைக்காக வழங்கப்படவுள்ளன.

IND/TN/08/MM.346, IND/TN/08/MM.1872, IND/TN/08/MM/1436, IND/TN/06/MM/6824, IND/TN/10/MM/693, IND/TN/10/MM/405, IND/TN/10/MM/2573, IND/TN/11/MM/857, IND/TN/11/MM/298, IND/TN/11/MM/28, IND/TN/16/MM/1872, IND/TN/16/MM/1861 ஆகிய இலக்கப் படகுகளுடன் 13 படகுகள் கடற்படையின் பயன்பாட்டுக்கு வழங்கப் பணிக்கப்பட்டுள்ளது.

---

## கிளி. ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்வேறு ஊடக நிறுவனங்களில் சுயாதீன ஊடகவியலாளராகப் பணியாற்றி வந்திருந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக சிகிச்சைக்காகவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டிருந்தரஞ்சன்,சிகிச்சைபலனின்றிநேற்று உயிரிழந்துள்ளார்.

---

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணத்துக்கு வந்ததுள்ளமை மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதிலும் அனைவரும் எதிர்பார்க்கின்ற ஊடக அமையத்துக்கு வந்துள்ளமை மேலும் சந்தோசமாக உள்ளது.

வடக்கு மாகாணத்தில் வாழுகின்ற எங்களுடைய சகோதர - சகோரிகளின் வாழ்க்கை முறை எவ்வாறு இருக்கின்றது. இங்கு அவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள், இந்த வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செல்கின்றார்கள் என்பவற்றை அறிந்துகொள்வதே எமது இந்தப் பயணத்தின் நோக்கமாக உள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மிகப் பெரிய அளவில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது. அதுவும் தெற்கை மையப்படுத்திய ஒரு தேசியக் கட்சிக்கு யாழ்ப்பாணத்திலும் மிகப் பெரும்பான்மையாக ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

நான் இன்று பருத்தித்துறைக்குச் சென்றிருந்தேன். அங்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்டு இருந்த ஒரு வாக்கியத்தைப் பார்த்தேன். அதாவது பன்மைத்துவத்தில் ஒற்றுமை என்று இருந்தது.

உண்மையில் அந்த வாக்கியம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சரியாவே பிரதிபலித்துள்ளது. தற்போது இவையெல்லாம் யாழ்ப்பாணத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதையே காட்டுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நான் இங்கு விஜயம் செய்வது மிகவும் அர்த்தம் உள்ள ஒன்றாகவே கருதுகின்றேன்.

நான் வடக்கு மாகாணத்துக்கு முதல் தடவையாகக் கொவிட் கால கட்டத்திலேயே வந்திருந்தேன். அந்தக் கால கட்டத்திலேதான் சினோபாம் கொவிட் தடுப்பூசிகளை சீன அரசு இலங்கைக்கு வழங்கி இருந்தது.

அப்போது சினோபாம் என்ற எமது தடுப்பூசிகளை வடக்கு, கிழக்கு முழுவதும் முழுமையாகப் பாவிக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் சீன அரசு வலியுறுத்திக் கூறியிருந்தது. இவ்வாறு நாம் வலியுறுத்திக் கூறியதாலேயே இங்குள்ள மக்களுக்கும் அந்தத் தடுப்பூசிகள் பாவிக்கப்பட்டன.

இவ்வாறு வடக்கு, கிழக்கிலுள்ள எங்களுடைய சகோதர - சகோதரிகளுக்கு நாம் தடுப்பூசிகளை வழங்கியதைத் தொடர்ந்து இங்குள்ளவர்களுக்கு எங்களுடைய பல்வேறு உதவிகளைச் செய்தோம்.

அதனடிப்படையில் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கினோம். அதே போன்று ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளையும், மீன்பிடி உபகரணங்களையும் வழங்கினோம்.

அந்த ஆண்டின் முதல் அரைநாண்டு காலத்தில் சீன அரசால் பல மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை வடக்கு மாகாணத்துக்கு மட்டும் வழங்கியிருக்கின்றோம். இதற்கமைய வீட்டுத் திட்டம், அரிசி, மீன்பிடி உபகரணங்கள் என பவற்றை வழங்கினோம்.

இவற்றில் அரிசியை முழுமையாக வழங்கியுள்ளோம். ஆனாலும், வீட்டுத் திட்டம் மற்றும் மீன்பிடி உபகரணங்களை இப்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

சீன அரசு வழங்கிய உதவிகளின் பட்டியல் இலங்கை அரசால் தயாரிக்கப்பட்டவைதான். அந்தப் பட்டியலுக்கமைய எமது உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

சீனாவினுடைய நீண்டகால நண்பனாக இலங்கை இருக்கின்றது. ஆகையினால் இலங்கை அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளையும் சீன அரசும் மதிக்கும்.

இலங்கைஅரசுடன்கடன்மறுசீரமைப்பு தொடர்பான ஒரு இணக்கப்பாட்டுக்கு முன்னேற்பாடான ஒரு ஒப்பந்தத்தை முதன் முதலில் சீனாதான் எழுதியது.

அதனைக் கடந்த ஆண்டு செய்திருக்கின்றோம். இதில் இருந்து நீங்கள் ஒன்றை விளங்கிக்கொள்ளக் கூடியது என்னவெனில் சீன அரசு ஒரு முன்னுதாரணமாக இந்த விடயங்களைச் செய்து வருகின்றது என்பதைப் பார்க்கலாம்.

இலங்கையினுடைய மிக நெருக்கமான அயல்நாடாக இந்தியா இருக்கின்றது. அதனால் இலந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு பலப்படுவதையும், பொருளாதார ரீதியான நெருக்கம் பலப்படுவதையும் நாங்களும் விரும்புகின்றோம்.

இவ்வாறான நிலைமையில் வருகின்ற டிசம்பர் மாதத்தில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத் கூறியிருக்கின்றார்.

இது மிகவும் சந்தோசமான விடயம். அவ்வாறு அவர்கள் விஜயம் செய்வதை நாங்கள் விரும்புகின்றோம். அதன் பிற்பாடு இலங்கை ஜனாதிபதி அவருக்கு ஏற்ற வகையில் பொருத்தமான நேரத்தில் சீனாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளலாம்.

ஏனெனில் சீனாவுக்கும் இலங்கை மக்களுக்கும் இடையில் பொருளாதார மேம்பாடுகளும் பரிமாற்றங்களும் வளர்ந்து வர வேண்டுமென்றே நாங்களும் விரும்புகின்றோம்.

சீனாவுக்கு வடக்கு மக்களுடன் செய்ய வேண்டிய கலாசார மற்றும் கல்வி ரீதியான இரு தரப்பு பரிமாற்றங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன.

சீன அரசு இலங்கைக்கு அதிகூடிய வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்குகின்ற ஒரு நாடாகவே இருந்து வருகின்றது.

ஏனென்றால் சீனாவைப் பொறுத்த வரையில் இலங்கை மக்களின் ஆற்றலும் திறமையும் வளர்க்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பமாக உள்ளது.

எனக்குத் தெரிந்தவரைக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனாசார் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் கல்விசார் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றே வருகின்றன.

நான் அறிந்த வரையில் சீன புலமையாளர் யாழ். பல்கலைக்கழகத்திலும், யாழ். பல்கலைக்கழகப் புலமையாளர்கள் சீனப் பல்கலைக்கழகத்திலும் தங்களுடைய கற்கை நெறிகளைக் கற்று வருகின்றார்கள்.

எனக்கு குழப்பகரமான ஒரு உணர்வை ஏற்படுத்துவது என்னவெனில் என்னுடைய சக உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் சீனப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துவதற்கு விரும்புகின்றதால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தோடு தொடர்பை ஏற்படுத்துகின்றபோது அவர்களால் உரிய முறையில் தொடர்பை ஏற்படுத்துவதில்லை என்பது குழப்பகரமான உணர்வைத் தருகின்றது.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருக்கின்றது என்றே நான் நம்புகின்றேன். அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருப்பதானது தமிழ் மக்கள் பரந்த சிந்தனையோடு விடயங்களை இப்போது நோக்க ஆரம்பித்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது. இதனூடாக இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஏற்பட்டு ஒளிமயமான எதிர்காலம் இந்த நாட்டில் ஏற்படுவதற்கான ஒரு குறியீடாகவே நான் இதனைப் பார்க்கின்றேன்." - என்றார்.

# இலங்கைக்கு வந்தார் நடிகர் மோகன்லால்



மலையாளத் திரையுலகின் பிரபல நடிகர் மோகன்லால் நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

இலங்கை வந்த நடிகர் மோகன்லாலுக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

மலையாளத் திரையுலகில் நடிகர், திரைப்படத் தயாரிப்பாளர், பின்னணிப் பாடகர், திரைப்பட விநியோகஸ்தர் மற்றும் இயக்குனர் என மோகன்லால் பன்முகம் கொண்டவராவார்.

அண்மையில் நடிகர் மோகன்லால், கேரள நடிகர் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட சோதனை



எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அறிக்கையொன்றை வெளியிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபை இதனைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜனவரி 15 ஆம் திகதி வரையில் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பிரதான மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலை என்பவற்றை சோதனையிட்டு, காலாவதியான மற்றும் விபரங்கள் திரிபுபடுத்தப்பட்ட பொருள்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதைத் தடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மேற்படி காலப்பகுதியினுள் சிறப்பங்காடிகள் உள்ளிட்ட சில்லறை விற்பனை நிலையங்கள், மலிவு விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் வர்த்தகங்கள் குறித்தும் கூடுதல் அவதானம் செலுத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2024

"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது,

மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள்."–

**மிகைல் கோபர்ச்சேவ்**
**(சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)**






# சீன தூதர் கீ சென்ஹொங் பருத்தித்துறைக்கு விஜயம்

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் பருத்தித்துறைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டனர்.

வடக்கு மாகாணத்திற்கு மேற்கொண்டுள்ள விஜயத்தின் ஒரு பகுதியாக சீன தூதுவர் நேற்று மதியம் பருத்தித்துறை – சக்கோட்டை முனைக்கு குழுவினரோடு சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீன தூதுவர் பதிலளிக்கையில்,

"வடக்கு கிழக்கில் உள்ள சிறு கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை சீன அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களர்கள் என்ற வேறுபாடுகள் இன்றி இலங்கையர்களாக வாழ்வதற்கு சீன அரசு தொடர்ந்து பாடுபடும்."– என்றார்.

# தேயிலை செய்கைக்கான உரங்கள் கிடைக்கவில்லையென குற்றச்சாட்டு



அம்பலாங்கொடை – நியகம பிரதேசத்தில் தேயிலைச் செய்கைக்குத் தேவையான உரங்கள் தமக்குக் கிடைக்கவில்லை எனத் தேயிலைத் தோட்ட விவசாயிகள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

உர மானியம் உரிய முறையில் கிடைக்காததால் அதிக விலை கொடுத்து உரத்தைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் ஆராய அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவித்த விவசாய அமைச்சு, இது தொடர்பான அறிக்கையை விவசாய அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்தது.

உர மானிய பணத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனினும், மேற்படி பணம் இதுவரை கிடைக்கவில்லை என விவசாயிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சீனச் சார்பு நிலைமை

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூசென் கொங் மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

முதல்முறையாக யாழ் ஊடக அமையத்தில் அவர் வடக்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறார். அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து சரளமாக உரையாடி மனம் விட்டுப் பேசியிருக்கின்றார்.

யாழ் ஊடக மையத்தில் அவர் வடக்கு பத்திரிகையாளர்களை சந்தித்து ஊடாடிய விடயத்தை ஒட்டி விமர்சகர் ஒருவர் 'ஆட்சி மாற... காட்சியும் மாறுகிறது' - என்று கருத்து வெளியிட்டிருக்கிறார்.

உண்மைதான். சீனத் தூதுவரின் யாழ் வருகையை ஒட்டிய களநிலைமைகள் இம்முறை தலைகீழாக மாறியிருக்கின்றன. அவரே எதிர்பாராத பிரதிபலிப்புகள் - வரவேற்புகள் - வடக்கில் அவருக்குக் கிட்டி இருப்பதாகக் களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழில் முனைவோர், ஏற்றுமதி இறக்குமதிகளோடு தொடர்புடையோர், பொருளாதார நிபுணர்கள், பல தரப்பு வர்த்தகப் பிரமுகர்கள் என்று சுமார் 18 பேர் நேற்று முன்னிரவு தனியார் விடுதி ஒன்றில் சுமார் 2 மணி நேரம் சீனத் தூதுவருடன் அந்நியோன்னியனாகக் கலந்துரையாடி இருக்கின்றனர்.

சீனத் தூதுவரின் முன்னைய வடக்கு விஜயங்களின் போது அவர் எதிர்கொண்ட கசப்புணர்வுப் போக்கு இம்முறை இந்த சந்திப்புகளில் இல்லை. இம்முறை, வடக்கின் தொழில் முனைவோரும், நிபுணர்களும், ஏற்றுமதி - இறக்குமதி தொடர்புடைய வர்த்தகர்களும் சீன தூதுவரோடு நெருங்கிக் கலந்துரையாடி இருக்கிறார்கள். சீன வர்த்தக முயற்சிகள் வடக்கு நோக்கி திரும்புவதற்கான பிரதிபலிப்புகள் வடக்கிலிருந்து இம்முறை அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

வடக்கில் சீன முதலீடுகளுக்கு வரவேற்பு, சீன தரப்புகளோடு கூட்டு வர்த்தக முயற்சிகள், சீன நிறுவனங்களோடு இணைந்து வடக்கில் ஏற்படுத்தக்கூடிய தொழில் நடவடிக்கைகள் பற்றி எல்லாம் இங்குள்ள வர்த்தக தரப்புக்கள் சாதகமான கருத்துக்களை சீன தூதுவருக்குத் தெரிவித்திருக்கின்றன என அறிய வருகின்றது.

இதற்கு முன்னர் அவர் வடக்கில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் - எதிர்கொண்ட நிலைமைக்கும் இப்போதைய ஆட்சி மாற்றத்தின் பின்னரான நிலைமைக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதாகத் தெரிகிறது . சீன வர்த்தக முயற்சிகளை - தொழில் பங்களிப்புகளை - முதலீடுகளை - சமுக, கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி சார்ந்த திட்டங்களை - வடக்கில் வரவேற்கும் போக்கு போன்றவை இப்போது சீனத் தரப்புக்குச் சாதகமாக மாறி இருப்பதாக சுயாதீன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் ஆட்சிப் போக்கிலும் தென்னிலங்கையோடு சேர்ந்து வடக்கு இலங்கை காரியமாற்றும் சூழலில் வடக்கு தரப்பின் சீனா தொடர்பான நிலைப்பாட்டிலும் மாற்றம் காணப்படுகிறது.

அயல் தேசமான இந்தியாவுக்கு இந்த மாற்றம் - இந்தப் போக்கு - விருப்பத்துக்குரியதாக இருக்காது என்பது திண்ணம். ஆயினும், இந்த நிலைமை மாற்றத்துக்குக் காரணம் புதுடில்லியின் ராஜதந்திர தோல்வியும்தான் என்பதை மறுக்க முடியாது.

இந்தப் பத்தியில் நீண்ட காலமாக நாம் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டி வருவது போல இலங்கையில் தன்னுடைய உண்மையான நண்பர்கள் யார், கபடமான எதிரிகள் யார் என்பதை அடையாளம் கண்டு செயல்படுவதில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் புதுடில்லி பாரிய தவறு இழைத்ததின் விளைவு இது.

இப்போது புதுடில்லிக்குச் சார்பாக கொழும்பும் இல்லை, வடக்குக் கிழக்கு தமிழர்களும் இல்லை என்ற நிலைமை உருவாகி வருகிறது.

கொழும்பைத் தாஜா செய்வதற்காக தமிழர்களை கைவிட்ட புதுடில்லி ராஜதந்திரம், அதன் பெறுபேறுக்கான விளைவை - வினையை - அறுவடை செய்ய வேண்டிய சூழல் உருவாகி வருகின்றது.

இப்போதும் கூட இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக நீதி, நியாயமாக குரல் எழுப்பாமல், தன்னுடைய ராஜதந்திர நலன்களின் அடிப்படையில் மாத்திரமே விடயங்களைக் கையாண்டு வரும் புதுடில்லியின் போக்கு, இலங்கை தொடர்பில் அதன் அணுகுமுறைக்கு பெரும் தோல்வியையே பெற்றுத் தந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையையும் காட்டும் போக்கில் இந்தியாவையும் சீனாவையும் கொழும்பு மிகத் தந்திரமாக கையாண்டு வருகிறது.

பாவம் ஈழத் தமிழர்கள். இந்தியாவை மட்டுமே தங்கள் ஆபத்பாந்தவர்களாக கருதி இருந்து, இன்று நடுவீதிக்கு வந்த நிலையில், கொழும்பையே நேரடியாக அரவணைக்கும் நிலையை நோக்கி அவர்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

சீனச் சார்பு இடதுசாரி அரசு கொழும்பில் வந்து விட்டது. நம்பி இருக்கும் இந்தியா தங்களோடு நிற்கும் என்பதற்கான நம்பிக்கையை இழந்துவிட்ட தமிழர்கள், கொழும்போடும், கொழும்பு அரவணைக்கும் சீனாவோடும் இணைந்து செயல்பட்டால் என்ன என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். அந்த நிலைக்கு அவர்களைத் தள்ளிய புதுடில்லியின் அர்த்தமற்ற ராஜதந்திரம்தான் இதன் விளைவுகளைப் பற்றி இனி அதிகம் கவலைப்படப் போகின்றது.



# வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி மீனவர்கள் கடலுக்கு செல்வதற்குத் தடை

தெற்கு அந்தமான் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நாளை, ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும் எனவும் இதன் காரணமாக, எதிர்வரும் 23 ஆம் திகதியளவில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அத்துடன், இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த இரு தினங்களில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் எனவும் இதன் காரணமாக தமிழகத்தில் அடுத்த 6 நாள்களாக பரவலாக மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“தென் தமிழகம் மற்றும் அதனை அண்மித்த குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் எதிர்வரும் 21 ஆம் திகதியளவில், ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும். இதன் காரணமாக, 23ஆம் திகதியளவில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த இரு தினங்களில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும்.

இதன் காரணமாக, தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு



இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தமிழக கடலோரப்பகுதிகளில் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும். வங்கக் கடல் பகுதிகளில், நாளை தென்கிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகள் மற்றும் அதனை அண்மித்த தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும்.

நாளை மறுதினம் தென்கிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35முதல் 45 கிலோ மீற்றர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும். 23 ஆம் திகதி, தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகளில், லட்சத்தீவு, மாலைதீவு மற்றும் அதனை அண்மித்த தென்கிழக்கு அரபிக்கடல்பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 இடையிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும், என்பதால் மேற்குறிப்பிட்ட நாள்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம்.” என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

## ஜி 20 உச்சிமாநாடு:

# உலக தலைவர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை

ஜி 20 மாநாட்டின் இடையே இத்தாலி, இந்தோனேஷியா, நோர்வே, போர்த்துகல், எகிப்து மற்றும் தென் கொரியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

தனது இரண்டு நாள் நைஜீரியா விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை பிரேசில்சென்ற பிரதமர் நரேந்திர மோடி, திங்களன்று இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியைச் சந்தித்து, பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உறவுகளை ஆழப்படுத்துவது குறித்து விவாதித்தார்.

இதுதொடர்பில் மோடி தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“ரியோ டி ஜெனிரோ ஜி 20 உச்சி மாநாட்டின் இடையே பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியை சந்தித்ததில் மகிழ்ச்சி. பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உறவுகளை ஆழப்படுத்துவதை மையமாக வைத்து எங்களது




பேச்சுக்கள் அமைந்தன.

கலாச்சாரம், கல்வி மற்றும் பிற துறைகளில் ஒத்துழைப்பை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றியும் நாங்கள் பேசினோம். இந்தியா-இத்தாலி நட்புறவு ஒரு சிறந்த உலகிற்கு பெரிதும் பங்களிக்கும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஏவுகணை பயன்படுத்தினால் தகுந்த பதிலடி வழங்கப்படும்

## உக்ரைனை எச்சரிக்கும் ரஷ்யா

அமெரிக்காவின் நீண்டதூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்துவது பொருத்தமான மற்றும் உறுதியான பதிலடிக்கு வழிவகுக்குமென ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், தமது எல்லைக்குள் இத்தகைய தாக்குதல்களை மேற்கொள்வதானது ரஷ்யாவுக்கு எதிரான விரோதப் போக்கில் அமெரிக்காவின் நேரடி ஈடுபாட்டைப் பிரதிபலிக்கும் எனவும் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் அமெரிக்காவின் நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுமதி வழங்கியுள்ளார்.

வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக இந்த அனுமதியை அவர் வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யா – உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதாக உறுதியளித்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அவர் இத்தகையதொரு அனுமதியினை வழங்கியிருப்பது அதிர்ச்சியளிப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.









# இஸ்ரோவின் ஜிசாட் - என் 2 செயற்கைக்கோளை விண்ணில் ஏவியது ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட்

இஸ்ரோவின் ஜிசாட்–என் 2 செயற்கைக்கோளை எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது.

விண்வெளி துறையில் தனக்கென தனி முத்திரை பதித்துள்ள இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ ஆண்டுதோறும் பல செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவி வருகிறது. இவை அனைத்துமே ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ராக்கெட்டுகள் மூலம் ஏவப்பட்டு வந்தன.



இந்நிலையில் விண்வெளி ஆராய்ச்சி, விண்வெளிக்கு ராக்கெட் அனுப்புதல் உள்ளிட்டவற்றில் உலக நாடுகள் மட்டுமல்லாது தனியார் நிறுவனங்களோடும் இஸ்ரோ ஒப்பந்தம் செய்து இயங்குகிறது.


அந்த வகையில் இஸ்ரோவின் ஜிசாட்–என் 2 செயற்கைக்கோளை ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ராக்கெட் மூலம் இஸ்ரோவின் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஜிசாட் – என்2 விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

இந்திய நேரப்படிநேற்று அதிகாலை 12.01 மணியளவில் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்பட்டது. இந்த செயற்கைக்கோள் 4700 கிலோ எடை கொண்டது என்பது கவனிக்கத்தக்கது.

இஸ்ரோவுக்கும், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துக்கும் இடையே வர்த்தக ரீதியில் செயற்கைக்கோள் ஏவப்படுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரோவின் வர்த்தக பிரிவான நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட்டின் தலைவரும், நிர்வாக மேலாளருமான ராதா கிருஷ்ணன் துரைராஜ், ஜிசாட்–என் 2 செயற்கைக்கோள் அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டதை உறுதி செய்துள்ளார்.







# தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு கருத்தரங்கு

யாழ் அரச சார்பற்ற இணையத்தின் ஏற்பாட்டில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியாளருக்கான கருத்தரங்கு நேற்று யாழ் டேவிட் வீதியில் உள்ள திருமறைக் கலா மண்டபத்தில் நடைபெற்றது.

பணதூய்மையாக்கல், இலஞ்சம், ஊழல், சொத்துக்கள் பொறுப்புகள், சட்டவிரோதமான விடயம், தகவல் உரிமை சட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுடான முறையற்ற செயல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்கள், பொறுப்புக்கள் விடயம், நெறிமுறை செயல்கள், ஊழலை ஒழிப்பதற்கான இலஞ்ச ஊழல் சட்டம், இலஞ்சம் ஊழலுக்கான காரணங்கள், மக்களுடைய குறைவான விழிப்புணர்வு, ஊழலை கட்டுப்படுத்த மற்றும் குறைக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை, தகவல் அறியும் சட்டமூலமாக அதிகாரத்தினை கேட்டல், பிரதேச சபை, நகரசபை, மாநகர சபை ஆகியவற்றில் தகவல் உரிமைச்சட்டம் தொடர்பாக மக்கள் கேள்வி கேட்க வேண்டும் என்பன தொடர்பாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இதில் யாழ் அரச சார்பற்ற இணையத்தின் நிகழ்ச்சி திட்ட அலுவலகர் எஸ்.சிவானந்தன், மற்றும் எஸ்.தினேஸ்குமார் பங்குபற்றித் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.









# வடக்கு ஆளுநரின் ஊடக இணைப்பாளராக ஊடகவியலாளர் திலீப் அமுதன் நியமனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் ஊடக இணைப்பாளராக ஊடகவியலாளர் திலீப் அமுதன் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

15 ஆண்டுகளாக ஊடகவியலாளராக பணியாற்றிய அவர் தற்போது ஆளுநர் செயலக ஊடக இணைப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

'தினக்குரல்' மற்றும் 'உதயன்' பத்திரிகைகளில் நீண்ட காலம் ஊடகவியலாளராக அவர் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.







# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டன் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் நேற்றய் திருகோணமலை மாவட்ட செயலகப் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த விவசாயக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இம்முறை மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுரைக்கிணங்க விவசாய அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் களநிலை பிரச்சினைகள் மற்றும் கருத்துக்கள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் பெறப்பட்டமை குறிபிடத்தக்கது.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.சுப்ரமணியம், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் ரி.கருணைநாதன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள்,விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வன்னிக்கு மேலும் ஒரு தேசியபட்டியல்! ஒன்பதாக அதிகரித்த பிரதிநிதித்துவம்!!

(கி.வசந்தன்)

வன்னிதேர்தல் மாவட்டத்திற்கு ஐக்கியமக்கள் சக்தி ஊடாக மேலும் ஒரு தேசியபட்டியல் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாப்தியூதீனின் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரசின் முக்கியஸ்தரான முஹம்மது இஸ்மாயில் முத்துமுஹம்மது என்பவருக்குத் தேசியபட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இம்முறை பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தனித்து போட்டயிட்டு ஓர் ஆசனத்தைப் பெற்றுக்கொண்டதுடன்,



வன்னி உட்பட ஏனைய மாவட்டங்களில் ஐக்கியமக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது.

அந்தவகையில் ஐக்கியமக்கள் சக்திக்கு கிடைக்கப்பெற்ற ஐந்து தேசியபட்டியல் ஆசனத்தில் ஒன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்க்கு வழங்குவதற்கு நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முக்கியஸ்தருமான முஹம்மது இஸ்மாயில் முத்துமுகமது என்பவருக்கு அந்தப் பிரதிநித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இவரது நியமனத்துடன் வன்னி மாவட்டம் 9 நாடாளுமன்றப் பிரதிநித்துவங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

# ‘கிருபா லேணர்ஸ்’ உரிமையாளர் கிருபாகரன் நேற்றுக் காலமானார்

பிரபல தொழிலதிபரும், ‘கிருபா லேணர்ஸ்’ நிறுவன உரிமையாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவருமான அழகசுந்தரம் கிருபாகரன் காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றையதினம் அவர் உயிரிழந்தார்.

கிருபாகரன் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.





# அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனம்

பிரதமரின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர் உட்பட 18 அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அந்த வகையில், ஜி.பி.சபுதந்திரி – பிரதமரின் செயலாளர், டபிள்யூ. எம்.டி.ஜே. பெர்னாண்டோ – அமைச்சரவை செயலாளர், சிரேஷ்ட பேராசிரியர் கபில சி. கே. பெரேரா – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு, கே. எம். எம் சிறிவர்தன – நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, ஜே. எம் திலகா ஜயசுந்தர – கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏ. எம். பி. எம். பி அத்தபத்து – புத்த சாசனம், மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு என நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பி. கே பிரபாத் சந்திர கீர்த்தி – தோட்டங்கள் மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு, எச். எஸ்.எஸ். துய்யகொன்னா – பாதுகாப்பு அமைச்சு, டி. டபிள்யூ. ஆர். பி செனவிரத்ன – பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சு, யூ. ஜி ரஞ்சித் ஆரியரத்ன – நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு, பேராசிரியர் கே.டி. எம். உதயங்க ஹேமபால – எரிசக்தி அமைச்சு, எஸ். ஆலோக பண்டார – பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு எஸ். எம் பியதிஸ்ஸ – தொழிலாளர் அமைச்சு மற்றும் ஏ. விமலேந்திரராஜா – வர்த்தகம், வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு என நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், டி. பி. விக்கிரமசிங்க – விவசாயம், கால்நடைகள், நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, கே. எம். ஜி. எஸ். என் களுவெவ – கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, ஏ. எச். எம். யு அருண பண்டார – இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு, அருணி ரணராஜா – வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு என நியமனம் பெற்றுள்ளனர்.

# உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்குமாறு முன்னாள் எம்.பிக்களுக்கு மீண்டும் அறிவுறுத்தல்



உத்தியோகபூர்வ இல்லங்களை இன்றைய தினத்திற்குள் கையளிக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

108 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டிருந்தன என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இதுவரை 30 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது உத்தியோகபூர்வ இல்லங்களை கையளித்துள்ளனர்.

108 உத்தியோகபூர்வ இல்லங்களில் 70 இல்லங்களின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமானப் படையுடன் இணைந்து இராணுவம் மற்றும் கடற்படையினரும் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என கூறப்பட்டுள்ளது.

10 ஆவது நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் டிசர்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு பின்னர் முன்னெடுக்கப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

சட்டரீதியாக நாளை முதல் அதற்கான இயலுமை காணப்படுகின்ற போதிலும், தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள புனரமைப்பு பணிகள் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# கல்வி வெளியீட்டு மேலதிக ஆணையாளராக சுஜாதா குலேந்திரகுமார் நேற்று நியமனம்



(எஸ்.கீதபொன்கலன், வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளருமான திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் இலங்கை கல்வி நிர்வாக சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அவர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டு, நேற்று செவ்வாய்க்கிழமை தமது கடமையைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.





இதனால் மட்டக்களப்பு வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடமும், கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடமும் ஏற்பட்டுள்ளது.

திருமதி சுஜாதா மட்டக்களப்பைப் பிறப்பிடமாக கொண்டவராவார்.




# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளை நடத்த தடை

2024 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான விரிவுரைகள், மேலதிக வகுப்புகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளை நேற்று நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை நடத்தமுடியாது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிவுறுத்தல்களை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பரீட்சை காலப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக மாகாண, வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இம்முறை உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு 333,185 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இதனிடையே, உதவி மண்டபப் பொறுப்பாளர்கள்உள்ளிட்ட மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு பரீட்சை மண்டபங்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டுசெல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மத்திய நிலையத்திற்கான மண்டப பொறுப்பாளர்கள், மேலதிக மேற்பார்வை பொறுப்பாளர்களுக்கு மாத்திரமே கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



# 10ஆவது நாடாளுமன்றத்தின் நாளைய கன்னி அமர்வில் சபாநாயகர் தெரிவு

பத்தாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நாளை இடம்பெறவுள்ள நிலையில், அதன்போது, சபாநாயகர் தெரிவு இடம்பெறும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை கூட்டம், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

21 அமைச்சரவை அமைச்சர்கள் நேற்று முன்தினம் பதவியேற்றிருந்த நிலையில், அவர்கள் நேற்றைய அமைச் சரவை கூட்டத்தில் கலந்துகொண்ட னர்.

இதன்போது, புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

இதேவேளை, பத்தாவது நாடாளு மன்றத்தின் சபை முதல்வராகப் போக்கு வரத்து நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளராக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவு செய்யப்பட்டுள் ளார் என நாடாளுமன்றத் தகவல் கள் தெரிவிக்கின்றன.



# பெரும்போக செய்கைக்கான உர விநியோகம் நிறைவு

## விவசாய சேவைகள் திணைக்களம் அறிவிப்பு

பெரும்போகத்திற்கான முதலாம் கட்ட உர நிவாரணம் வழங்கும் நட வடிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

23 மாவட்டங்களில் 86,162 ஹெக் டேயர் விவசாயக் காணிகளுக்காக இந்த உர நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

129,229 விவசாயிகளுக்காக 1292.4 மில்லியன் ரூபா உர நிவாரண மாக வழங்கப்பட்டுள்ளதாக விவசாய சேவைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

விவசாய நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்படும் விதத்திற்கு ஏற்ப விவ சாயிகளுக்கு உர நிவாரணம் வழங்கப் படுமென விவசாய சேவைகள் ஆணை யாளர் நாயகம் ரோஹண ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை கிரிதலே மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் விடுவிக்கப்படுகின்றமை தாமத மடைந்துள்ளமையால் அந்த பகுதி களுக்கான உர நிவாரணமும் தாமத மடைந்துள்ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.



# வலுவடையும் தாழமுக்கம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

வங்காள விரிகுடாவை அண்மித்து எதிர்வரும் 23 ஆம் திகதி தாழமுக்கம் வலுவடையுமென்பதால் அப்பகுதிக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்லவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை மேல், சப்ரகமுவ, ஊவா, தென் மற்றும் வட மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்லவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

பலத்த மழையுடன் மின்னல் தாக்கங்களும் ஏற்படலாம் எனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் பல பகுதிகளில் கடும் மழையுடன் மின்னல் தாக்கங்கள் ஏற்படக்கூடும் எனத் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மின்னல் தாக்கங்களால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினரானார் ரஞ்சித் மத்தும பண்டார

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது தேசியப் பட்டியல் உறுப்பினராக ரஞ்சித் மததும பண்டார தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஐந்து தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயரை தேர்தல் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.11.2024



மேஷம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள்.



ரிஷபம்

இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.



மிதுனம்

இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.



கடகம்

இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



சிம்மம்

இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



கன்னி

இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.



துலாம்

உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



விருச்சிகம்

சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.11.2024




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

